1990 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ; உங்களுடைய பாராட்டோடு முடித்துக்கொள்ளலாம். வினாக் கேட்பதன் நோக்கம் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்பதுதான். எனவே உங்கள் நன்றியையும் பாராட்டையும் ஏற்றுக்கொண்டு, அடுத்த வினாவிற்குப் போகிறோம்.

செய்யாறு தொகுதிக்கு குடிநீர்

* 1142—திரு. வ. அன்பழகன்

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செய்யார் மற்றும் பாலாறு ஆகிய இரண்டு ஆறுகளில் இருந்தும் தண்ணீர் எடுத்து, செய்யாறு தொகுதிக்கான குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஆம், உள்ளது.

திரு. வ. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செய்யாற்றில் இருக்கிற நீர் ஆதாரத்தைக்கொண்டு மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், கொருகை கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற நான்கு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும், அதைப்போல பாலாற்றில் உள்ள நீர் ஆதாரத்தைக் கொண்டு உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டமும், வட இலுப்பை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேனல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காழியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பாராசூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய இந்த நான்கு திட்டங்கள் குறித்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்துவதற்கான அதிகாரம், உரிமை வாங்குவதற்காக வைக்கப்பட்டிருக்கிறது. மேலும் துரசிமா மண்டூர்—கொருக்கை கூட்டுக் குடிநீர்த் திட்ட ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. வ. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்ட இந்த 6 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில், இரண்டு மாதங்களுக்கு முன்பாக உமையாள்புரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு டெக்னிக்கல் சாங்ஷன் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் வழங்கி நிறைவேற்றுவதோடு, மீதமுள்ள 5 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் இந்த ஆண்டே நிறைவேற்ற அமைச்சரவர்கள் முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசினுடைய நிதி நிலையைப் பொறுத்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, பாலாற்றிலிருந்து ஆரணிக்கு தண்ணீர் கொண்டுவர ஒரு திட்டம் முதலிலே படைக்கப்பட்டது. ஆனால் செய்யாற்றிலிருந்து ஆரணிக்குத் தண்ணீர் கொண்டு வந்தால் திட்டத்தின் மதிப்பீடு குறையும், வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக இருக்கும் என்று நான் மனு செய்திருந்தேன். அது பற்றி மதிப்பீடு தயாரிக்க அதிகாரிகளுக்கு அமைச்சரவர்கள் உத்தரவிட்டுள்ளார்களா ? அதை விரைவாக நிறைவேற்றித் தர அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற இது போன்ற கருத்துக்கள் குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையம்

* 4266—திரு. ஆர். மூக்கன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

வன்னாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

9–40 மணி

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதியில் துறையூர் ஒன்றியத்தைச் சேர்ந்த பச்சைமலையில் வன்னாடு, கோம்பை